அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 29/2014

எனது இல: EST-7/LOANS/04/0207
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2014.12.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## <u>அரசாங்க அலுவலர்களுக்கு விசேட முற்பணம்</u>

2006.11.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 20/2006 தொடர்பாக தங்களது அவதானம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையின் 03 பந்தியின் 2006 ஆம் ஆண்டு என்பதற்குப் பதிலாக 2014 ஆம் ஆண்டு என்பதனை பிரதியீடு செய்வதற்கும், 2007 ஆம் ஆண்டு என குறிக்கப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் 2015 என பிரதியீடு செய்வதற்கு கீழ்ப்பட்டு அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2015 ஆண்டுக்காக ரூ. 4000/- இற்கு குறையாத விசேட முற்பணத் தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அவ்வாறே அச் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறவிடப்பட்ட வட்டியை பற்றுவைக்க வேண்டிய வருமான கணக்கு குறியீட்டு இலக்கமான 20.02.20.02 (வட்டி மற்றும் பிற) இல. 20.02.02.99 என திருத்தப்படும்.

03. இம் முற்பண கொடுப்பனவுகள் 2015.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015.02.28 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டியுள்ளதுடன், 2015.02.28 ஆந் திகதிக்குப் பின்னர் இம் முற்பண கொடுப்பனவுகள் செலுத்தப்படலாகாது.

04. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டது.

ஒப்பம்/ பி. பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு